**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 11** |
| **Name** | : | **Dr.திருமதி. வனிதா** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.06.2024**

எதிரி-1 ஆஜர். எதிரிகள் 2 முதல் 4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது, திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில், அறுவை சிகிச்சைப் பிரிவில், இணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.01.2010 அன்று மாலை 06.10 மணியளவில், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில், அவசர சிகிச்சைப் பிரிவில், நான் பணியில் இருந்த போது, தெற்குவாசல் காவல் நிலைய முதல் நிலை காவலர் 1930 திரு.இராஜபாண்டி என்பவர், பொன்மலர் என்பவரின் பிரேதத்தை சவக் கிடங்கில் வைப்பதற்காக, வேண்டுகோள் கடிதத்துடன் வந்தார். நான் விபத்துப் பதிவேட்டில் பதிவு செய்து, மேற்படி பிரேதத்தை சவக் கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். **அந்த விபத்துப் பதிவேடு நகல் அதசாஆ.11 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி1 தரப்பில்) :</u>**

விபத்து பதிவேட்டு நகலானது படிவ வடிவில் இருக்கும் என்றால் சரிதான். அதில் ஒரு அசலும், 2 நகல்களும் இருக்கும் என்றால் சரிதான். அசலை எங்களுடைய Medical Records Division க்கு அனுப்பி விடுவோம். ஒரு நகலை விசாரணை அதிகாரிக்கும் ஒரு நகலை அடிக்கட்டையில் வைத்திருப்போம். பொதுவாக சவக்கிடங்கில் வைக்க பிரேதமானது அனுமதிக்கப்படும் போது, விபத்துப் பதிவேட்டில் பிரேதத்தின் நிலை குறிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு குறிக்கப்படவேண்டியது இல்லை. கண்டிப்பாக பிரேதத்தின் நிலை பற்றி விபத்து பதிவேட்டில் குறிக்கப்பட வேண்டும் என்றும், அது வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் குறிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக, மண்ணெண்ணெயினால் உடலில் தீக்காயங்கள் ஏற்பட்டு இருந்தால் அதற்கான அறிகுறிகள் தனியாகத் தெரியும் என்றால் சரிதான். அதேபோல் மண்ணெண்ணெயின் நெடி வரும் என்றால் நேரத்தைப் பொறுத்து நெடி வர வாய்ப்புண்டு. இறந்த நபரின் தோல், வாடை போன்ற விபரங்கள் பற்றி விபத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் 2 முதல் 4 தரப்பில்) :</u>**

1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை